முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1165

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.12.2022, புதன்கிழமை

1. சரவணச்சுடரேற்றி பேருலகில்
சற்குருவாய் அற்புதம் நிகழ்த்துகின்ற
சரவணப்பிரியன் என் அவதாரமே
சங்கடம் போக்கும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென சுபகிருது தேள் திங்கள்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 21 ம் நாள் 07.12.2022, புதன்கிழமை)
வல்லமை கூடிட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனுக்கு நித்தம்நித்தம்
உயர்வாக பிரம்மவேளை தன்னில்
சூட்சும சக்திகள் வழங்கி வர
சுருதிபடி அரங்கன் திருவடி பற்றி
4. பற்றியே உலகோர் பாவ வினைகள் அகல
பழுதின்றி சரணாகதி கொண்டால் போதும்
போதுமப்பா இந்த பேருலகில்
புண்ணியபலமாக புகழ்மிக்க அரங்கன் அருளாலே
5. அருளாலே கலியுகம் மாற்றங்கண்டு
அரங்கன் அவதாரத்தின் நோக்கமாக
இருள் விலகி இந்த உலகில் ஞானயுகம்
இனிதே அரங்கன் சேவையால் நிகழக்கூடும்
6. கூடவே கலியுக மக்களெல்லாம்
குருவே என தொடர்ந்து வந்தால் போதும்
நாடெங்கும் இந்த மாற்றம் நடந்தேறும்
ஞானிகளாக மக்களுக்கும் வாய்ப்பு கிட்டி
7. வாய்ப்புகிட்டி உலகோர் பிறவிப்பயனை
உயர்வாக அடைந்து இனிதே
இனிதே அரங்கன் வழிவழி இனிவருங்காலமும்
இணையில்லா ஞானியர் படைகளாக
8. படைகளாக இதுகாலம் இணைபவரோடு
பாடிடுவேன் அவர்கள் வம்சாவழிக்கும்
துணிவுபட அரங்கன் தயவுகூடி
தொடர்ந்து ஞானியர் படைகளாக

9. ஆகவே காலம் காலம் நிலைபெற்று
கலியுகம் ஞான யுகமாக மாற்றங்கண்டு
அழியாமை கொண்ட சக்திமிக்க
ஆற்றல்மிக்க உலகாக இந்த பேருலகம் மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–